முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

OS. No.10/2007

Witness DW7

பெயர் / தமிழ்மாறன்

**த.பெ - சின்னராசு**

**இன்று** (17.09.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தந்தையார் பெயர் சின்னராசு என்றால் சரிதான், தாயார் பெயர் ரங்கநாயகி என்றால் சரிதான், எங்களது பெற்றோர்களுக்கு ராஜவேணி, பெரியண்ணன், மல்லிகா, விஜயா, செல்வி மற்றும் தமிழ்மாறனாகிய நான் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான், எனது தந்தையார் 19,12,1990ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான், தாயர் 21,6,2018 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான், எனது தந்தையார் இறப்பதற்கு முன்பாக அவர் புற்றுநோயால் இறந்துபோனார் என்றால் சரிதான், புற்றுநோய் சிகிச்கைக்காக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவ மனையிலும் சென்னை ஸ்டேன்லீ மருத்துவமனையிலும் 10 ஆண்டு காலம் சகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான், 3ம் பிரதிவாதி பெரியண்ணன் என்பவர் எனது மூத்த அண்ணன் என்றால் சரிதான், அவர் 1954ல் பிறந்தார் என்றால் சரிதான், நான் 1970ல் பிறந்தேன் என்றால் சரிதான், எனக்கும் அவருக்கும் சுமார் 16 வருடம் வித்தியாசம் என்றால் சரிதான், எனது சகோதரிகள் அனைவருக்கும் 1982க்கு முன்பே திருமணம் நடந்துவிட்டது என்றால் சரிதான், எனது சகோதரிகளுக்கு ஒவ்வொருவருக்கும் சுமார் 60 பவுன் சீர் செய்து திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் அப்போது எனக்கு சிறிய வயது என்பதால் எவ்வளவு சீர் செய்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது, நான் பாண்டிச்சேரியில் உள்ள குட்செஃபர்டு தனியார் பள்ளியில் படித்தேன் என்றால் சரிதான், எந்த வருடத்திலிருந்து 6 முதல்12 வரை படித்தேன் என்றால் 1984 1989, அது நான் பாத்திமா பள்ளியில் தான் படித்தேன் என்றால் சரிதான், அது உண்டு உறைவிடப்பள்ளி என்றால் சரிதான், அதன் பிறகு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பொறியியல் கல்லூரியில் பொறியியல் பட்டப்படிப்பு படித்தேன் என்றால் சரிதான், நான் கல்லுரியில் சேரும் போது மெரிட்டில் கிடைக்காததால் பணம் ரூ,40,000. செலுத்திதான் சேர்ந்தேன் என்றால் சரிதான், 89 90 முதல் 92 93 கல்வியாண்டில் முடித்தேன், எனது கல்வி செலவிற்கு எனது மூத்த அண்ணன் பெரியண்ணன் தான் செலவு செய்தார் என்றால் கூட்டுக்குடும்பம் என்பதால் எனது தந்தையார் மற்றும் எனது பெரியண்ணன் ஆகியோர்கள் செலவு செய்தார்கள், எனது அண்ணன் அரசு பள்ளியில் தான் படித்தார் என்றால் அது எனக்கு தெரியாது, அவர் என்ன படித்துள்ளார் என்றால் பியுசி படித்துள்ளார், நான் படித்து முடித்தவுடன் வேலைக்கு சென்றுவிட்டேனா என்றால் கொஞ்ச காலம் விவசாயம் பார்த்தேன், அதன் பிறகு சிறிய கம்பெனியில் சேர்ந்தேன், 1999 2021 வரை சவுதி அரேபியா சென்றுவிட்டேன், நான் பொறியியல் பட்டம் படித்து வேலைக்குச் செல்லாமல் இருந்ததால் எனது அண்ணன் தான் ரூ,1,00,000. செலவு செய்து என்னை சவுதி அனுப்பிவைத்தார் என்றால் சரியல்ல, எனக்கு வெளிநாட்டில் மாதம் ரூ,15,000. சம்பளம் என்றால் சரியல்ல, ரூ,30,000. சம்பளம், அங்கு தங்குமிடம் மற்றும் உணவிற்கு எவ்வளவு செலவு என்றால் அது கம்பெனியே கொடுத்துவிடும், நான்

வெளிநாட்டிலிருந்து எனது அண்ணனுக்கு பணம் அனுப்பியதற்கு ஆதாரம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நான் வெளிநாட்டில் 1 வருடம் 8 மாதம் மட்டுமே பணி செய்தேன் எனது சம்பளம் எனது செலவுக்கே போதுமானதாக இருந்தது இந்த சூழ்நிலையில் நான் எனது அண்ணனுக்கு பணம் அனுப்பியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனது அண்ணனுக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1978 ல் ஆனது, அவர் மனைவி பெயர் லலிதா அவர் கொத்தப்புரிநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர், லலிதாவின் தாந்தை குப்புசாமிக்கு அவரது கிராமத்தில் சுமார் 70 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது, லலிதா திருமணம் செய்து வந்த போது அவரது தந்தை 100 பவுன் சீர் வரிசை செய்தார் என்றால் இல்லை, எனது அண்ணன் பெரியண்ணனுக்கு விவசாயம் மற்றும் நிலங்களை குத்தகைக்கு பயிர் வைப்பதற்கு குப்புசாமி உதவி வந்தார் என்றால் சரியல்ல, 1970 ல் எனது அண்ணன் பாவாடை என்பவரிடம் ஒரு ஏக்கர் நிலமும்இ கோவிந்தராஜ் மற்றும் பலராம பண்டிதர் ஆகியோர்களிடம் 3 ஏக்கர் நிலமும் ஆக 4 ஏக்கர் குத்தகை வைத்து வந்தார் என்றால் சரியல்ல, 1972 ல் 4 ஏக்கர் பெருமாள் கவுண்டரிடம் குத்தகைக்கு பயிர் செய்து வந்தார் என்றால் சரியல்ல, எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோதே எனது அண்ணன் பெரியண்ணன் பெயரில் நிலங்கள் வாங்கப்பட்டது என்றால் சரிதான், வழக்கு அயிட்டங்கள் 6,7, 9, 26, 32 முதல் 35, 40 மற்றும் 42 முதல் 44 ஆகியவைகள் எனது அண்ணன் பெரியண்ணன் பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் அவை கூட்டுக்குடும்பத்திற்காக எனது தந்தையார் இருந்தபோதே எனது அண்ணன் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள், பொதுக்குடும்ப வருவாயில் வந்த வருமானத்தை எனக்கும் எனது சகோதரிகளுக்கும் தான் செலவு செய்தார் மேற்படி சொத்துக்கள் அவரது சொந்த வருவாய் கொண்டு வாங்கப்பட்டவைகள் என்றால் சரியல்ல, எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 2004 ல் திருமணம் ஆனது,

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/- A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram